செ.வெ.எண். 156/2009(செமதொஅ) நாள் : 05.06.2009.

**தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை சார்பில் நடைபெற்ற உலக சுற்றுச்சூழல் தின விழால் மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.டி.பி.எம்.மைதீன்கான் அவர்கள் சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கு விருதுகளை வழங்கினார்.**

தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை சார்பில் காஞ்சிபுரம் எஸ்.எஸ்.கே.வி. மகளிர் மேல்நிலைப் பள்ளியில் உலக சுற்றுச்சூழல் தின விழா நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.டி.பி.எம்.மைதீன்கான் அவர்கள் கலந்து கொண்டு சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கு விருதுகளை வழங்கி விழாப் பேருரையாற்றியதாவது,

சுற்றுச்சூழலை பாதுகாக்க தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக 7500 பள்ளிகளில் தேசிய பசுமைப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றிற்காக மத்திய-மாநில அரசுகள் ஆண்டிற்கு ரூ.2500 கோடி செலவிடுகிறது. இளைய தலைமுறையினரிடம் சுற்றுசூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினால் தான் உலகம் வெப்பமயமாதலை தடுக்க முடியும். பள்ளி, கல்லூரிகளில் 50 ஆயிரம் மாணவர்கள் கொண்ட சுற்றுச்சூழல் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மரக்கன்றுகள் அதிகளவில் நட ஏதுவாக ரூ.4 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சென்னை உள்பட அனைத்து நகரங்களிலும் மரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்றன. முழு சுகாதாரத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்வு பெறும் 2 சிறந்த கிராமங்களில் 500 மரக்கன்றுகளை நட சுற்றுச்சூழல் துறை ஏற்பாடு செய்யும் என்று தெரிவித்தார்.

விழாவிற்கு மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.நம்பிராஜன் அவர்கள் தலைமை தாங்கினார். தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தலைவர் திரு.ஆர்.பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. திட்ட விளக்கவுரை ஆற்றினார். சுற்றுச்சூழல்த்துறை இயக்குநர் முனைவர்.அண்ணாமலை அவர்கள் கருத்துரையாற்றினார். முன்னதாக சுற்றுச்சூழல் துறை கூடுதல் இயக்குநர் திரு.பி.ரெட்டி வரவேற்றார். காஞ்சிபுரம் நகரமன்ற உறுப்பினர்கள் திரு.சி.வி.எம்.அ.சேகர், திரு.ஆறுமுகம் ஆகியோர் வாழத்துரையாற்றினர். முதன்மைக்கல்வி அலுவலர் திரு.வெ.ரமணா, மாவட்ட சுற்றுச்சூழல் நல பொறியாளர் திரு.ப.ராஜசேகர் ஆகியோர் கலந்து கொண்டனர். முடிவில் சுற்றுச்சூழல்துறை துணை இயக்குநர் திரு.சு.தெய்வசிகாமணி நன்றி கூறினார்.

**செய்தி வெளியிடுபவர்,**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**காஞ்சிபுரம்.**